மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே இந்த ஏரியைப் பொறுத்தவரையில் 533 ஏக்கர் பாசன வசதி உடையது. 1977 ஆம் ஆண்டில் இரண்டு உடைப்புகள் ஏற்பட்டு ஏறத்தாழ 12,000 ரூபாய் செலவில் அவைகள் அடைக்கப்பட்டன. மீண்டும் கரைகளை வலுப்படுத்துவதற்காக இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, இப்போது எவ்வளவு ரூபாய்க்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது ? சுற்றியுள்ள ஏரிகளையும் ஆழப்படுத்தி, கரைகளை வலுப்படுத்திக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல இந்த ஏரியில் இரண்டு உடைப்புகள் ஏற்பட்டன. அதற்கு ஏறத்தாழ 12,000 ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. அதற்குமேல் இந்த ஏரியில் கரைகளை வலுப்படுத்துவது அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது.

புதிய தொண்டியக்காடு வாய்க்கால் திட்டம்.

* வினா எண். 170—திரு பொ. உத்திராபதி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காவேரி வளர்ச்சிப் பணித் திட்ட ஆய்வில் உள்ள நியூ தொண்டியக்காடு வாய்க்கால் திட்டத்தினை செயலாக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு.ப. குழந்தைவேலு : புது தொண்டியக்காடு வாய்க்காலை அபிவிருத்தி செய்வதற்கான திட்டத்தின் விரிவான ஆய்வு முடிவுற்று மதிப்பீடு மற்றும் வரைபடங்களும் தயாரிக்கப்பட்டுவிட்டு, இவற்றின் பரிசீலனையும் முடியும் தருவாயில் உள்ளன.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, இந்த நியூ தொண்டியக்காடு வாய்க்கால் பகுதியில் பல பள்ளப் பகுதிகள் இருக்கின்றன. மழை வரக்கூடிய காலங்களில் தொடர்ச்சியாக அந்த பள்ளப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் நாசமடைகிறது ; ஒவ்வொரு ஆண்டும் இந்த நிலை இருந்துகொண்டிருக்கிறது. நடவு நட்ட 3 மாதத்திலேயே அழிந்துவிடுகிறது. ஆகவே மேலும்காலம் கடத்தாமல் விரைவில் தொடங்கி, நிறைவேற்ற அமைச்சரவர்கள் வாக்குறுதி கொடுப்பார்ளா ?

[1979 பிப்ரவரி 24]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, இதற்காக $7\frac{1}{4}$ இலட்சம் ரூபாயிலே மதிப்பீடு செய்யப்பட்டு கடந்த 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் தேதி அரசு அதற்கான ஆணை பிறப்பித்துள்ளது. அதற்கான பூர்வாங்க வேலைகளைத் தொடருவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தினையும் ஏற்றுக்கொண்டு கூடிய சீக்கிரத்தில், விரைவுபடுத்தப்பட்டு செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்.

* வினா எண் 171—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் புதிய 'ஒழுங்கு முறை விற்பனைக் கூடம்' ஏற்படுத்திடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இந்த வினாவிற்கு இடமில்லை.

திரு என். கிட்டப்பா : தலைவரவர்களே, விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருட்கள் அத்தனையும் இத்தகைய ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் மூலமாக விற்பனை செய்தால் விவசாயிகளுக்கும் தகுந்த வருமானம் வரும். இடைத் தரகர்கள் இல்லாத நிலையும் ஏற்படும். ஆகையால் இனியேனும் அரசு அது பற்றிச் சிந்தித்து குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இதனை ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கக்கூடிய கேள்வி தஞ்சை மாவட்டத்தில் புதிய ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் ஆரம்பிக்கப்பட இருக்கிறதா என்பதுதான். தஞ்சை மாவட்டத்தில் ஏற்கெனவே 24 இடங்களில் விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆகவே மேலும் புதிய விற்பனை கூடம் என்று ஒன்று துவங்குவதாக இல்லை. ஆனால் கீவளூர்